கட்டடங்களிலும், 4 அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அவற்றில் அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

அதேபோல, வாடிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக இடம் கோரப்பட்டுள்ளது. இடம் கிடைத்தவுடன், உடனடியாக பணிகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 376, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

376—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

*__936__—**திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், 4,551 போக்குவரத்து வாகனங்களைக் கொண்டு, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தற்போது இயங்கி வருகிறது. எனவே, ஒரே சட்டமன்றத் தொகுதியில்

2013 மே 2]

10 கிலோ மீட்டர் இடைவெளியில் இரண்டாவது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சே, 7 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே, (மேசையைத் தட்டும் ஒலி) 120 கோடி இந்திய மக்களின் எதிர்பார்ப்பே, எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகின்றேன்.*

தற்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமாக ஒரு ஏக்கர் 40 சென்ட் இடம் உள்ளது. இந்த இடத்தில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் 3 ஆயிரம் சதுர அடியில் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றது. மீதமுள்ள இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருகிறது. மீதமுள்ள இடத்தை கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து போக்குவரத்துத் துறைக்கு மாற்றி, புதிய அலுவலகம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அல்லது 2 கிலோ மீட்டர் தொலைவில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தினை அறநிலையத் துறையிடமிருந்து பெற்று, போக்குவரத்துத் துறைக்கு புதிய அலுவலகம் கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், ஓட்டுநர் தேர்வுத் தளமும் ஒரே இடத்தில் அமைய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி, ஓர் அலுவலகம்*

அமைப்பதற்கு 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. திட்ட மதிப்பீடு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளவாறு சொந்தக் கட்டடம் கட்ட, நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

வீட்டுமனைப் பட்டா

__22511__—திரு. ப. டில்லி பாபு:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, எல்லப்புடையாம்பட்டி ஊராட்சி, கொளப்பாரை கிராமத்திலுள்ள அருந்ததியர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.*